செ.வெ.எண்.70/ஆகஸ்ட் தேதி : 27.08.2016

**பத்திரிக்கைச் செய்தி**

**தொழிலாளர் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை கட்டுமானம் மற்றும் அமைப்புச்சாரா நல வாரியம் சார்பில் தொழிலாளர்களுக்கு அட்டை மற்றும் ரூ. 7 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.**




தொழிலாளர் நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுமானம் மற்றும் அமைப்புச்சாரா நல வாரியங்கள் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பணியாளர்கள் சிறப்பு உறுப்பினர் செயற்கை முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை ஊராட்சி, ரெட்டரி ஏரியில் இன்று (27.08.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் விபத்தில் மரணமடைந்த பதிவு பெற்ற தொழிலாளர்களின் வாரிசுதாரர்கள் 4 பேருக்கு தலா ரூ. 1 இலட்சத்து 2 ஆயிரத்திற்கான ஆணையையும், இயற்கை மரணம் அடைந்த பதிவு பெற்ற தொழிலாளர்களின் வாரிசுதாரர்கள் 14 பேருக்கு தலா ரூ. 17 ஆயிரத்திற்கான ஆணையையும், 60 வயதை கடந்த 100 தொழிலாளர்களுக்கு முதியோர் உதவித்தொகை ரூ. 1000/- பெறுவதற்கான ஆணைகளையும் ஆக மொத்தம் 118 பேருக்கு ரூ. 7 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்கள் நலனே தன் நலன் என்று அயராது பாடுபட்டு மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அமைப்புச்சாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் இன்னல்களை போக்குவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட 17 நல வாரியங்களால் செயல்படுத்தப்படும் பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை தொழிலாளர்களுக்கு வழங்கும் வகையில் தொழிலாளர் அலுவலர் சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் 2.19 இலட்சம் தொழிலாளர் உறுப்பினர்களாக 17 நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் கடந்த 5 ¼ ஆண்டுகளில் 44,615 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் அமைப்புச்சாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் சார்பில் 16,117 நபர்களுக்கு ரூ. 400 கோடியும், கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் 67,962 நபர்களுக்கு ரூ.19.57/- கோடி ஆக மொத்தம் 84.079 தொழிலாளர்களுக்கு ரூ. 23.57 கோடி மதிப்பில் நலத்திட்டங்கள் மற்றும் உதவித் தொகைகளை வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தால் அரசின் பல்வேறு துறைகளின் மூலம் அளிக்கும் திட்டம், உதவிகள், சாதனைகள் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்கள் அனைத்தும் முழுமையாக பொதுமக்கள் அறிந்து பயன்பெற வேண்டும். மேலும் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் 17 நல வாரியங்கள் மூலம் வழங்கப்படும் திட்டங்கள் தங்களுக்கு முழுமையாக கிடைத்திட தாங்கள் அனைவரும் தொழிலாளர் நல வாரிய அட்டை பெற்று வைத்திருக்க வேண்டும். தொழிலாளர் அட்டை இல்லாதவர்கள் உடனடியாக அட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசின் திட்டங்கள் தங்களுக்கு உடனடியாக வழங்க ஏதுவாக இருக்கும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் திரு. தொ.மு.நாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட தொழிலாளர் நல அலுவலர் திரு. கோட்டீஸ்வரி, மகளிர் திட்டம் திட்ட அலுவலர் திரு. கல்யாணசுந்தரம், தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. டி.ஆர். அன்பழகன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. எம். பொன்னுவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.